*ஐயம் :* அன்னிய ஒரு ஆண் மற்றொரு பெண்ணுடைய கையைப் பிடித்து முஸாபஹா கைலாகு செய்வது கூடுமா? குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் விளக்கம் தரவும். *நிஷா, குவலேந்திரம்*

*தெளிவு :* **ஆதமின் புதல்வனாகிய மனிதன்மீது விபச்சாரத்திலிருந்து அவனுடைய பாகத்தை (அவனில்) அமைக்கப்பட்டுள்ளது. நிச்சயமாக அதை அவன் அடைந்தே தீருவான். ஆகவே கண்களின் விபச்சாரம் பார்வையாகும். நாவின் விபச்சாரம் பேச்சாகும். காதுகளின் விபச்சாரம் செவிமடுத்தலாகும். உள்ளம் ஏக்கமடைகிறது, விரும்புகிறது. ஆனால் மர்ம உறுப்போ அதை மெய்ப்பித்து விடுகிறது அல்லது பொய்பித்து விடுகிறது** என்று நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். ***அறிவிப்பவர் : அபூஹுரைரா(ரழி), நூல்கள் : புகாரீ, முஸ்லிம்***

**அந்த மூஃமினாகிய பெண்கள் அல்லாஹ்வுக்கு எப்பொருளையும் இணை வைப்பதில்லை என்றும், திருடுவதில்லை என்றும், விபச்சாரம் செய்வதில்லை என்றும் .....** (அல்குர்ஆன் 60:12) என்ற வசனத்தின் அடிப்படையில் **(கை அடித்துக் கொடுக்காமல் வெறுமனே) பேச்சின் மூலமே நபி(ஸல்) அவர்கள் பெண்களிடத்தில் பைஅத்து ஒப்பந்தம் செய்தார்கள் என்பதாக ஆயிஷா(ரழி) கூறுவதோடு, நபி(ஸல்) அவர்கள் நமது ஆதிக்கத்தின் கீழ் உள்ள பெண்களைத் தவிர எந்தப் பெண்ணுடைய கையையும் தொட்டதில்லை என்பதாகவும் கூறியுள்ளார்கள்.** ***அறிவிப்பவர் : ஆயிஷா(ரழி), நூல் : புகாரீ***

மேற்காணும் வசனமும், ஹதீஸும் அன்னிய ஆணும், பெண்ணும் ஒருவரை மற்றொருவர் பார்த்துக் கொள்வது தவறு என்பதை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் தமது பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும் என்று எச்சரித்திருக்கும் போது, அன்னிய ஓர் ஆணும், பெண்ணும் பரஸ்பரம் ஒருவர் மற்றொருவரின் கையைப் பிடித்து முஸாபஹா கைலாகு செய்வதானது பெரிய குற்றமாகும். காரணம் **“நீங்கள் விபச்சாரத்திற்கு நெருங்காதீர்கள்; நிச்சயமாக அது மானக்கேடானதாயிருப்பதோடு (வேறு கேடுகளில் பக்கம் இட்டுச் செல்ம்) தீய வழியாகவும் இருக்கிறது”** (அல்குர்ஆன் 17:32) என்று அல்குர்ஆன் கூறுகிறது.

ஆகவே ஒருவருக்கொருவர் கண்ணால் பார்ப்பதைவிட கையால் பிடிப்பதானது தீமைக்கு மிக நெருக்கமாயிருப்பதால் மேற்காணும் வசனத்தின் அடிப்படையில் இது கூடாது என்பதை அறிகிறோம்.